அண்ணா - கலைஞர் காலத்திலிருந்து இன்று தளபதி தலைமையிலும் 61 ஆண்டு காலம் நாடாளுமன்றத்தில் கழகத்தின் குரல் ஒலித்து வருகிறது!

# இந்திய நாட்டின் இறையாண்மையைக் காப்பதில் தி.மு.க. எவருக்கும் சளைத்ததல்ல!

## இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உணர்ச்சிமிகு உரை!

புதுடெல்லி, செப்.20-

**பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்து இன்று தளபதி தலைமையிலும் 61 ஆண்டு காலம் நாடாளுமன்றத்தில் கழகத்தின் குரல் ஒலித்து வருகிறது! என்றும், இந்திய நாட்டின் இறையாண்மையைக் காப்பதில் தி.மு.க. எவருக்கும் சளைத்ததல்ல! என்றும், இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் உணர்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

நாடாளுமன்றத்தின் 5 நாட்கள் சிறப்பு அமர்வு நேற்று முன்தினம் (18.09.2023) புதுடெல்லியில் தொடங்கியது. இந்த சிறப்புத் தொடரின் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சமாக இந்திய விடுதலையின் 75வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் விவாதம் இடம் பெற்றுள்ளது. இதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்கள். செப்டம்பர் 18 முதல் 22 வரை நடைபெற உள்ள இந்தத் தொடரின் முதல் நாளான நேற்று முன்தினம் (18.9.2023) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார்.

டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

97 ஆண்டுகள் பழம்பெருமை கொண்ட இந்த நாடாளுமன்றக் கட்டடத்தில்தான் சுதந்திர இந்தியாவின் எதிர்காலத்தையும் தலைவிதியையும் நிர்ணயித்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. 1962 ஆம் ஆண்டில் எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா மாநிலங்களவையிலும் அதே ஆண்டில் இரு உறுப்பினர்களுடன் மக்களவையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றப் பணி தொடங்கியது. அன்று முதல் சென்ற 61 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் தி.மு.க.வின் குரல் ஒலித்த வண்ணம் உள்ளது.

### ஏழை-எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் கழகம்!

நாட்டின் ஏழை எளிய மக்களுக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் நாங்கள் குரல் எழுப்பி வருகிறோம். எங்கள் குரல் அரசால் செவிமடுக்கப்பட்டு மக்களுக்கு உரிய நியாயம் கிடைத்தது என்பதை எண்ணிப் பார்க்கும்போது மனநிறைவு கிடைக்கிறது. எனவே, புதிய நாடாளுமன்ற வளாகத்துக்கு நாளை செல்லும் முன்னர், இந்த மாளிகையை ஒரு முறை திரும்பிப் பார்க்கும்போது ஏக்கப் பெருமூச்சுடன் இனம் புரியாத உணர்வுகள் வந்து மோதுகின்றன. புதிய நாடாளுமன்ற மாளிகையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றப் பணி இந்த மாளிகையில் அமைந்ததுபோலவே நீண்ட நெடுங்காலம் தொடரும் என்று நம்புகிறேன்.

இந்த அமர்வு சிறப்பு அமர்வு என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் இது வழக்கமான ஒரு அமர்வாகத்தான் உள்ளது. புதிய நாடாளுமன்ற கட்டடம் தேவையில்லை என்ற போதிலும் பெரும் பொருட் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. அரசு நிதி நெருக்கடியின் பிடியில் இருந்தாலும் இத்தகைய பெரிய அளவிலான நிதியைக் கக்கி இந்த புதிய வளாகத்தை அமைத்துள்ளது. பெரும் ஆரவாரத்துடன் நாடாளுமன்றத்தின் புதிய வளாகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்தின் கடந்த கூட்டத்தொடர் புதிய வளாகத்தில் நடத்தப்படவில்லை. ஏன்? என்ன காரணம்? வாஸ்து குறைபாடு ஏதும் இருந்ததா என்ன? அல்லது இன்றுதான் நல்ல நேரம் கிடைத்துள்ளதா?

மங்களகரமான நல்ல நேரம் என்பதை விட இந்திய நாட்டின் 143 கோடி மக்களின் மகிழ்ச்சி, நலம், அமைதி, முன்னேற்றம் ஆகியவற்றை உறுதி செய்திடும் அவையின் நிகழ்ச்சி நிரல்தான் அவசியம். ஆனால், புதிய வளாகத்தில் நடைபெறும் இந்த அமர்வு சிறப்பு அமர்வாகத் தோன்றவில்லை. மாறாக அவசரக் கூட்டம் போலவே இருக்கிறது. அதிலும், வெளியிடப்படாத ஒரு முடிவை ஆளும் கட்சியின் மறைமுக ஆசையை நிறைவேற்றக் கூடிய; அதிலும் மக்களாட்சி மாண்புகளுக்கு புறம்பான வகையில் செய்து முடிக்கக் கூட்டியுள்ள அமர்வாகத்தான் தெரிகிறது.

இந்தக் கூட்டத்தொடர் இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிறைவான நிலையில் நமது செயல் நாடுகளையும் சாதனைகளையும் மதிப்பீடு செய்யும் முகத்தான் சிறப்பு அமர்வு அழைக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் சொல்கிறீர்கள். 1947 ஆம் ஆண்டில் நாம் விடுதலை பெற்றோம். 75 ஆம் ஆண்டுகள் நிறைவு விழா என்பது சென்ற ஆண்டு அதாவது 2022லேயே நிகழ்ந்திருக்க வேண்டும். ஏற்கனவே நாடு 76 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துவிட்டது. எனவே, இது தொடர்பாக ஏதாவது சிறப்பு விழாக்களை, கொண்டாட்டங்களை மேற்கொள்ள விரும்பி இருந்தால் சென்ற ஆண்டில் அதனைச் செய்திருக்க வேண்டும்.

இருக்கட்டும். இப்படி ஒரு நிகழ்ச்சிதனை இந்திய நாடு 75 ஆண்டுகள் சுதந்திர நாடாகத் திகழ்ந்துள்ளதைக் கொண்டாட நாடாளுமன்றத்தின் இந்த சிறப்பு அமர்வை ஏற்கனவே உள்ள வளாகத்தில் நடத்தியிருக்கலாமே. ஏனென்றால், 1947 முதல் சுதந்திர இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயித்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டு வந்துள்ள எண்ணற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எல்லாம் அந்த பழைய மாளிகையில் தானே கருவாகி உருவாயின.

நமது அன்புக்குரிய இந்திய தேசம் இன்றைக்கு இந்த சிறப்பான இடத்துக்கு வந்துள்ளது என்றால் அதற்கு முதலாவது' காரணம் நாட்டு மக்களே! அவர்களின் விலை மதிப்பற்ற பங்களிப்பே. அந்தச் சாதனையைப் படைத்த அடுத்த பெருமை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து நாட்டை வழிநடத்திய அரசியல் தலைவர்களும் அவர்களின் கட்சியும் ஆகும். அதில் பெரும்பான்மையான காலம் அதாவது அறுபது ஆண்டுகள், இன்று ஆட்சியில் உள்ளவர் அல்ல, வேறு பல கட்சிகளும் தலைவர்களும் நாட்டை ஆளும் பெரும் பொறுப்பில் இருந்தனர் என்பதை கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

> இப்படி ஒரு நிகழ்ச்சிதனை இந்திய நாடு 75 ஆண்டுகள் சுதந்திர நாடாகத் திகழ்ந்துள்ளதைக் கொண்டாட நாடாளுமன்றத்தின் இந்த சிறப்பு அமர்வை ஏற்கனவே உள்ள வளாகத்தில் நடத்தியிருக்கலாமே. ஏனென்றால், 1947 முதல் சுதந்திர இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயித்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டு வந்துள்ள எண்ணற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எல்லாம் அந்த பழைய மாளிகையில் தானே கருவாகி உருவாயின.

வளர்ந்த இந்தியாவின் நவீன இந்தியாவின் வலுவான அடித்தளத்தை 60 ஆண்டு காலத்தில் அமைத்துக் கொடுத்த பெருமை ஆசிய ஜோதி பிரதமர் ஜவஹர்லால் நேரு தொடங்கி பல்வேறு தலைவர்களுக்கானது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு முன்னாள் பிரதமர்கள் லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், சவுத்ரி சரண் சிங், இளம் தலைவர் ராஜீவ் காந்தி, நரசிம்ம ராவ் ஆகியோர் அளித்த பங்களிப்பு மிகவும் சிறப்பானதாகும்.

நவீன இந்தியாவை உருவாக்கிட மறைந்த இளம் தலைவர் பிரதமர் ராஜீவ் காந்தி எத்தகைய அளப்பரிய சாதனையை செய்து இணையற்ற இடத்தைப் பிடித்துள்ளார் என்பதையும் இந்த அமர்வு நினைவுகூர வேண்டும். அவர்தான் டிஜிட்டல் இந்தியாவின் தந்தை. கிராமப்புற மக்களின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையின் விளைவாக பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை இயற்றினார். அடித்தட்டு மக்கள், ஆட்சி அதிகாரத்தில் நேரடியாக பங்கேற்றிட வழிகோலினார். பஞ்சாயத்து அமைப்புக்கள் இன்றைக்கு உயிர்ப்புடன் இருக்கவும் இயக்கவும் ராஜீவ் காந்தி அவர்களே காரணம்.

### வி.பி.சிங் அவர்களின் தனிச் சிறப்பு!

நாட்டு மக்கள் தொகையில் 60 விழுக்காட்டுக்கும் கூடுதலாக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் காவல் அரணாகத் திகழ்ந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் எண்ணற்ற காலம் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டு நான்காம் தர மக்களாக புறந்தள்ளப்பட்டுக் கிடந்த அந்த மக்களுக்கு சமூகநீதி கிடைத்திட உறுதி செய்த பெருமகன் ஆவார். அந்த வகையில் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும் பணியும் பங்களிப்பும் இமாலயம் அளவுக்கு மதிப்பு வாய்ந்தது. நவீன வரலாற்றில் அவர் தனித்து நின்று சுடர் விட்டு விளங்குகிறார். எளிய மக்கள் அதிகாரம் பெற்றிடக் கூடாது என்பதில் திண்ணமாக இருந்த சக்திகள் வி.பி.சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கி அரசைக் கவிழ்த்தனர் என்பது கசப்பான வரலாறு.

அரசியல் ரீதியாக இந்திய நாடு நிலையற்ற தன்மைக்குத் தள்ளப்பட்டு தவித்த காலகட்டத்தில் நாட்டைக் காப்பாற்றிய பல தலைவர்கள் உள்ளனர். அரசியல் முதிர்ச்சியும் தீர்க்க தரிசனமும் வாய்க்கப் பெற்ற இத்தலைவர்கள் அரசமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில், மெயின் ஸ்ட்ரீம் கட்சிகளான தேசிய கட்சிகள் மக்கள் ஆதரவை இழந்து தனிப் பெரும்பான்மை அவற்றின் கைகளில் இருந்து நழுவிப் போன சூழலில் நாடு திக்கிழந்து நடுத் தெருவில் நிற்கின்ற ஒருவரைப் போன்ற நிலையில் பல தேர்ந்த தலைவர்கள் நாட்டை வழிநடத்தும் பெரும் சவாலான பொறுப்பை ஏற்றனர். இத்தகைய சூழல் 1989, 1996, 1998, 1999, 2004, 2009 என பலமுறை நேர்ந்தது.

இந்த நெருக்கடியான காலங்களில் நாட்டைப் பாதுகாக்க பல தலைவர்கள் பொறுப்



பேற்க முன்வந்தனர். தேவகவுடா, ஐ.கே குஜ்ரால், அடல் பிகாரி வாஜ்பாய், டாக்டர் மன்மோகன் சிங் ஆகிய பிரதமர்கள் தான் அவர்கள். இந்தக் காலகட்டங்களில் அவர்களுக்குத் துணை நின்று அரும் பங்கு ஆற்றிய தலைவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் என்.டி.ஆர்., ஜார்ஜ் பெர்னாண்டஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளின் முன்னாள் தலைவர்கள் இந்திரஜித் குப்தா, சோம்நாத் சட்டர்ஜி, சுர்ஜித் சிங், சோனியா காந்தி உள்ளிட்டோர் ஆவர். இந்தியாவின் 75 ஆண்டுகால வரலாற்றைத் திரும்பிப் பார்த்திடும்போது இந்த மாபெரும் தலைவர்கள் அனைவரின் உன்னதமான பங்களிப்பை போற்றிடாமல் நாம் கடந்து செல்ல முடியாது.

மத்தியில் நிலையான தேசிய அரசு அமைந்திட தி.மு.க. கடந்த காலங்களில் எத்தகைய அரும் பணியை புரிந்தது என்பதை சுட்டிக்காட்ட இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் அரசுக்கும், வாஜ்பாய் அரசுக்கும் கழகம் துணை நின்ற செய்திகளை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். 1969இல் காங்கிரஸ் கட்சி செங்குத்தாக பிளவுண்ட பின்னர், பிரதமர் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தார். 1967இல் அண்ணா மறைந்து, கலைஞர் முதல்வராகவும் கட்சித் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்த நேரம். அப்போது காங்கிரஸ் எங்கள் நட்புக் கட்சி இல்லை. சீனப் போர் காரணமாக ஏற்பட்ட வடுக்களைக்கூட நாம் மறக்காத காலம் அது. தெளிவான சிந்தையுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது இருந்த தி.மு.க. எம்.பி.க்கள் 26 பேரின் ஆதரவை இந்திரா அரசுக்கு நாட்டின் நலன் கருதி வழங்கினார். அதன் விளைவாக வங்கிகள் தேசியமயம், மன்னர் மானியம் ஒழிப்பு, வறுமை ஒழிப்புக்கான பல்வேறு முற்போக்குத் திட்டங்களை இந்திரா காந்தி அம்மையார் செயல்படுத்த முடிந்தது.

அதைப்போல 1999இல் வாஜ்பாய் அவர்கள் அ.தி.மு.க. பங்கேற்ற ஒரு நைந்துபோன எப்போதும் கிழிந்து போகும் கூட்டணி அமைத்து பிரதமர் ஆனார். தயவுக் கடிதம் தரும் நாளில் இருந்தே நிலையற்ற சூழலில் அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவினால் தள்ளப்பட்டார். நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற நிலையில் வாஜ்பாய் அரசு தொடர்ந்தது. 13 மாதங்களில் வாஜ்பாய் அரசை அ.தி.மு.க. கவிழ்த்தது. அந்த நியாயமற்ற செயலைக் கண்டித்தும் மத்தியில் நிலையான ஆட்சி அவசியம் என்பதையும் உணர்ந்து தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி நம்பிக்கை வாக்கெடுப்பில் தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணி பிரதமர் வாஜ்பாய் அவர்களை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும் 1999 மார்ச் திங்களில் நடைபெற்ற அந்த வாக்கெடுப்பில் ஒரே ஒரு வாக்கில் வாஜ்பாய் அரசு வீழ்ந்தது. பின்னர், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இணைந்தது. தொடர்ந்து நடந்த தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று வாஜ்பாய் பிரதமராக தனது பதவிக்காலத்தை நிறைவு செய்தார். பொக்ரான் அணுகுண்டு சோதனை, கார்கில் போரில் வெற்றி என்று பல்வேறு சாதனைகளை வாஜ்பாய் நிகழ்த்திக் காட்டினார். அதற்குக் காரணம், வாஜ்பாய் அவர்களின் சிறப்பான தலைமை, நேர்மையான அணுகுமுறை. குறைந்தபட்ச செயல் திட்டத்தை ஆர்வத்துடன் ஏற்றது. ராஜதர்மத்தை, தான் கடைப்பிடித்ததுடன் தனது கட்சித் தலைவர்களையும் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தியது போன்ற சீரிய நல்லியல்புகளாகும். அதனால்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், வாஜ்பாய் பிரதமராக முழு ஆதரவு நல்கினார்.

எனவே, தற்போதைய ஆட்சியாளர்கள் அண்மைக்கால இந்திய வரலாற்றின் முக்கியமான பக்கங்களை மீண்டும் படித்துப் பார்த்து தேசிய அரசியலிலும் மத்திய அரசு நிலையான அரசாக இருந்து பணியாற்றிடவும் எத்தகைய சிறப்புடன் அக்கறையுடன் பங்களித்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### தேசிய அரசியலில் தி.மு.க. தலைவர்களின் பங்கு!

தேசத்தின் வளர்ச்சிக்கும் அரசின் சிறப்பான செயல்பாடுகள் பயனுற அமைந்திடத் தேவையான ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்கிய எதிர்கட்சிகள் குறிப்பாக, தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகள் ஆற்றிய அரும் பணியையும் அதன் பொருட்டு தேசிய அரசியலில் அவை பெற்ற சிறப்பான இடத்தையும் இந்த நேரத்தில் நன்றியுணர்வுடன் நாம் நினைவுகூர வேண்டும். எதிர் வரிசையில் இருந்தபோதும் இந்தக் கட்சியினர் அவ்வப்போது அளித்து வந்த ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள், அறிவுரைகள், கோரிக்கைகளை எல்லாம் அரசு தனது செயல்பாடுகளில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு செயல்பட வழிகோலியது என்பது மறக்க முடியாததாகும். இவர்கள் பல்வேறு வட்டார மக்களின் பிரதிநிதிகளாக, மொழிவாரி சிறுபான்மை மக்களின் கவலைகளை அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் அரும் பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகம் 1962 ஆம் ஆண்டில் இருந்தே நாடாளுமன்றத்தில் பணியாற்றி வரும் பெருமைக்கு உரித்தானது. எங்கள் இயக்கமான தி.மு.க.வின் நிறுவனத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது சமகாலத் தலைவர்களான அன்றைய பிரதமர் நேரு, வாஜ்பாய் போன்ற தலைவர்களால் பெருமதிப்புடன் போற்றப்பட்டவர். அண்ணா அவர்கள் மாநிலங்களின் அரசியல் உரிமைகளுக்காகவும் தமிழ் உள்ளிட்ட தொன்மைப் புகழ் வாய்ந்த இந்திய மொழிகளின் பாதுகாப்புக்காகவும் இந்த அவையில் குரல் எழுப்பினார். அவர் தனித் திராவிட நாடு கோரிக்கையை முன்வைத்தார் என்றாலும் 1962இல் சீனா நம் மீது போர் தொடுத்த நிலையில் இந்திய நிலப்பகுதியின் பாதுகாப்பும் ஒற்றுமையும்தான் தலையாயது என முடிவெடுத்து திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டார். அன்று முதல் இந்திய நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மையைப் பாதுகாத்து நிற்பதில் தி.மு.க. எவருக்கும் சளைத்ததில்லை. திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டாலும் அதற்கான காரணங்கள் தொடர்கின்ற நிலை இருப்பதையும் அண்ணா சுட்டிக்காட்டி வந்தார். அந்த நிலை இன்றும் இருக்கிறது. அதைத்தான் தனது தேர்ந்த அறிவுரையாக அண்ணா எடுத்துரைத்தார். எப்படிப் பார்த்தாலும் இந்தியா என்பது பல்வேறு மாநிலங்கள் இணைந்துள்ள ஒன்றியம். மாநிலங்களின் ஒன்றியம். அரசியலமைப்புச் சட்டமும் இதைத் தான் சொல்கிறது. 560க்கும் மேற்பட்ட தனி நாடுகள், அதாவது சமஸ்தானங்கள் எனப்படும் பிரின்ஸிலி ஸ்டேட்ஸ், காஷ்மீர், ஹைதராபாத் போன்ற பெரிய நாடுகள் புதுக்கோட்டை போன்ற சிறுசிறு நாடுகள் எல்லாம் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியாவில் இணைந்துள்ளன. இந்த வரிசையில் இந்திய யூனியனில் கடைசியாக வந்து இணைந்த நாடு சிக்கிம்.

### இந்திய யூனியனின் வாக்குறுதி என்னவானது?

சென்ற 75 ஆண்டுகளில் ஒன்றியத்தில் இணைந்து இடம் பெற்றுள்ள மாநிலங்களுக்கு தந்த வாக்குறுதிகள் அந்த மக்களின் தனிப்பட்ட கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் சார்ந்த அபிலாஷைகளை ஒன்றிய அரசு உடைத்துவிட வில்லையா? காஷ்மீர் மாநிலத்துக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசமைப்புச் சட்டம் 370வது பிரிவு நீக்கப்பட்டு விட்டது. பட்ட காயத்தில் உப்பைத் தேய்த்து மேலும் துன்பம் தருவதுபோல அம்மாநிலம் ஜம்முகாஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பகுதிகளாக பிரிக்கப்படவில் யா? அதனால் அந்த மக்களின் உரிமைகளும் உணர்வுகளும்காலடியில்மிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 75 ஆண்டுகளில் சந்திராயன் போன்ற, நாடு சாதித்துள்ள வெற்றிச் சாதனைகளுக்கு தாங்கள் மட்டுமே காரணம் என எந்த ஒரு கட்சியும் தலைவரும் சொந்தம் கொண்டாடி தங்கள் முதுகில் தாங்களே தட்டிக் கொடுத்து பாராட்டி கொள்ள முடியாது. அது முறையல்ல. இந்தியாவின் 75 ஆண்டு கால சாதனைகள் எல்லாம் 143 கோடி ஒட்டு மொத்த மக்களின் சாதனை. மக்களின் உழைப்பும் ஆதரவும் வலிமையும் ஈடுபாடும் இல்லாமல் எந்த செயலையும் செய்து முடிக்க இயலாது.

உண்மையில் நாம் திரும்பிப் பார்க்க வேண்டியது 75 ஆண்டுகளில் நாம் சந்தித்த தோல்விகள் மற்றும் இழப்புகளைத் தான். இந்தத் தோல்விகள் வேறு எதுவும் இல்லை; காஷ்மீர், மணிப்பூர், தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு தரப்பட்ட வாக்குறுதிகளைக் காக்கத் தவறியதுதான். மாநில மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்றிடவும் பல்வேறு பகுதி மக்களின் வளர்ச்சிக்கு சம வாய்ப்பு, அவர்களின் மொழி, அரசியல் மற்றும் ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்யவும் இந்திய அரசு இன்னும் அணுக்கமாகச் செல்ல வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு உரையாற்றினார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; 19.9.2023 முதல் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நாடாளுமன்றத்தில் கூட்டம் நடைபெறப் போகிறதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி ; புதிய இடம், புதிய சூழலில் நாடாளுமன்றம் நடைபெறப் போகிறது.**

**பொதுவாக இடம் மாறும்போது மனமாற்றம் வரும் என்று சொல்வார்கள்.**

**ஆனால் எதிலும் 'ஒரே ஒரே' என்று ஒற்றைப் பார்வை கொண்ட ஒன்றிய பா.ஜ.க.வினர்க்கு, இடம் மாறினாலும், எண்ணமும் அணுகுமுறையும் மாறாது.**

**அவர்கள் எப்போதும் போல, "பொய் நீதியும் நேர்மையும் பேசுவர்; தினம் மதமும் பேதமும் கூறுவர்; அது வேதம் விதியென்றோதுவர்"!**

**நாடாளுமன்றத் தேர்தல் வருகிறதல்லவா; பொறுத்திருந்து பார்ப்போம் !**